# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16158/F/2024**

திரு.N.S.செல்வராஜ் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.N.S.செல்வராஜ் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக திரு.V.விநாயகமுருகன், காவல் ஆய்வாளர், கச்சிராயப்பாளையம் காவல் நிலையம், கள்ளக்குறிச்சி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 11/07/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் காவல் துறையில் பணிபுரியும் சீருடை பணியாளர்களின் சீருடை என்ன என்கிற தகவல் மற்றும் காவல் துறையில் பணிபுரியும் நேரத்தில் அணிந்திருக்க வேண்டிய முழுமையான சீருடை என்ன என்கிற தகவல் என்பன போன்ற தகவல்களை 4 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 30.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மனுவினை உரிய பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்துள்ளார். அதனைப் பெற்ற பொதுத்தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்(தலைமையிடம்), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் 24.08.2024 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார்., மனுதாரர் பொதுத்தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 13.08.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 18.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் 30.11.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத்தகவல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 09.10.2024 மற்றும் 04.11.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (07.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, பொது அதிகார அமைப்பினால் 09.10.2024 மற்றும் 04.11.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16158/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்),
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.N.S.செல்வராஜ்,
N.S.நகர்,
எலவனாசூர்கோட்டை அஞ்சல்,
கள்ளக்குறிச்சி- 607202.

Copy to file: KR/PA